05-04-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தற்காலக் கவிதைகளில் படிமங்களும் குறியீடுகளும்**

**தொடக்கவுரையாடல் : சி. சிவசேகரம் |**

தமிழிற் புதுக் கவிதை எனப்படும் மரபுசாராச் செய்யுள் வடிவங்களின் தோற்றம் தமிழ் மரபுக் கவிதையின் நெருக்கடியின் நேரடியான விளைவல்ல. சிறுகதையையும் நாவலையும் போன்று, ஐரோப்பிய -- அதினுங் குறிப்பாக ஆங்கில-- இலக்கியப் பரிச்சயத்தின் பயனான விளைவெனவே தமிழ்ப் புதுக் கவிதையைக் கொள்ள இயலும்.

புதுக் கவிதையின் வருகைக்கு முன்னரே வசன கவிதை என்பது பாரதியாற் கையாளப்பட்ட ஆனாற் பரவலாகாத ஒரு வடிவமாகும். அதுவும் வால்ற் விற்மனின் வசன கவிதைகளின் அருட்டுணர்வால் உருவானது எனலாம். மரபுச் செய்யுளின் இறுக்கமான எதுகை மோனை விதிகளைக் கைவிடல் இலங்கையில் தரமான புதுக்கவிதையின் தோற்றுவாயாயிற்று எனலாம்.

எவ்வாறாயினும் யாப்பின் பிற விதிகளதும் நெகிழ்த்தல் கவிதையின் முக்கியமான வேறு சில பண்புகளின் மீது கூடுதலான அழுத்தத்திற்கு வழிகோலியது. அவற்றுட் குறியீடும் படிமமும் முக்கியமாகின. சில வேளைகளிற் குறியீடும் படிமமும் புதுக் கவிதைக்கே உரியன என்றவாறும் பேசப்பட்டுள்ளது. உண்மை அதுவல்ல. அக் கூறுகள் எல்லாக் கவிதைகட்கும் உரியனவும் நெடுங்காலமாக இருந்துவந்தனவுமாம்.


உவமை என்பது இரு வேறு பொருட்களை அவற்றிடையே இல்பாகவோ வலிந்தோ காணப்படும் ஒற்றுமைகளின் அடிப்படையிலான ஒப்பீடாகும். உருவகம் என்பது அத்தகைய ஒற்றுமையின் அடிப்படையில் ஒன்றை மற்றொன்றாற் குறிப்பதாகும். இத்தகைய செயற்பாடு வரையறையின்றி விரியக்கூடிதாகும். இவற்றின் அடிப்படையில் குறியீடு, படிமம் எனுஞ் சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன எனக் கவனிப்போம்.

குறியீடு என்பது ஒரு பொருளை இன்னொன்றாற் குறிப்பதாகும். அங்கு உவமிக்கத்தக்க பண்புகள் இருக்கலாம். எனினும் அவ்வாறான இருப்பு அத்தியாவசியமானதன்று.
கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் பயன்படுங் குறியீடுகள் ஆக மிஞ்சினால் அவை குறிப்பவற்றுடன் ஒலி அல்லது எழுத்து அடிப்படையிலான ஒரு தொடர்பைக் கொண்டிருக்கலாம். அதற்கப்பாலான ஒற்றுமை அரிதானது. அங்கு சிக்கனங் கருதிக் குறியீடு பயன்படுகிறது.

கவிதையில், ஒரு பொருளை நேரடியாக் குறிப்பதைத் தவிர்க்கும் தேவைகருதி அவ்வாறு நிகழ்கிறது. அவ்வாறான தவிர்ப்பு, குறியீடாகப் பயன்படும் பொருளின் பல்வேறு இயல்புகளின் பயனாக வேறுபட்டதும் விரிவானதுமான வாசிப்புகட்கு வழி செய்யலாம். வலுவான முறையில் அமைந்த குறியீடுகள் கூறவந்த பொருளுக்கு வலுவூட்டலாம். வலுவற்ற குறியீடுகள் விளங்கப்படாமலே போகலாம், அல்லது குழப்பத்துக்கு இடமளிக்கலாம். இங்கு எதையும் ஒரு விதியாக நான் கூறவில்லை. மாறாக, நிகழக்கூடிய சிலதை மட்டுமே சுட்டிக்காட்டுகிறேன். அவை படைப்பாளியின் நோக்கத்துக்குட்பட்டு நிகழலாம் என்பதையும் நான் மறுக்கவில்லை.

படிமம் என்ற சொல் சிற்பத்தையும் குறிக்கும். படிமம் என்பது, ஒரு குறியீடானவன்றி, அது குறிக்கும் பொருளைப் பற்றிய மனச் சித்திரம் ஒன்றையும் வழங்குகிறது. எனவே, கவிதை கூறப்படும் முறையில் அதன் பாடுபொருளைப் பற்றியும் கவிதை கூறும் பிற விடயங்களைப்பற்றியும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மனச் சித்திரங்கள் உருவாக்கப்படலாம். இவை கவிதை கூற முனையும் செய்திக்கு வலுவூட்டும் முறையிற் சில பண்புகளை அழுத்தியும் சிலவற்றை நெகிழ்த்தியும் சிலவற்றை மாற்றியும் வழங்கலாம். ஒரு பொருளை வழமையாக விளங்கிக்கொள்ளக்கூடிய முறைகளினின்று வேறுபட்ட அல்லது முரணான முறைகளிலும் அதை அதன் படிமம் வழங்கலாம். படிமத்தை உருவாக்குவதிலும் கையாளுவதிலும் காட்டப்படும் ஆற்றல் கவிதைக்கு வலுவூட்டும் என்பதற்கப்பால், ஒரு காலத்திற் போன்று இன்னது தான் ஏற்புடையது, எனக் கூறல் அரிது. எனினும், செய்நேர்த்தியும் அழகியலும் சில அளவுகோல்களை வழங்கலாம்.

புதுக் கவிதை செய்துள்ள குறிப்பிடத்தக்க ஒரு புதுமை ஏதெனின் படிமங்களையே கவிதையாக வழங்குவதை அது இயலுமாக்கிற்று. அப் போக்கு இப்போது நலிந்துள்ள போதும் படிமங்களதும் குறியீடுகளதும் மிகையானதும் தெளிவற்றதுமான பயன்பாடு வருந்தத்தக்களவில் தொடருகிறது எனலாம்.



மக்ஸ் வெபர்

மக்ஸ் வெபர் (Maximilian Carl Emil Weber - 21 ஏப்ரல் 1864 - 14 ஜூன் 1920) ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு அரசியல் பொருளியலாளரும், சமூகவியலாளரும் ஆவார். இவரே பொது நிர்வாகத்துறையிலும் சமூகவியலிலும் தற்கால ஆய்வுகளைத் தொடக்கி வைத்தவர் எனக் கருதப்படுகிறார். பேர்லின் பல்கலைக்கழகத்தில் முதலில் பணியாற்றத் தொடங்கிய அவர், பின்னர், ஃப்ரீபர்க், ஹெய்டில்பர்க், மியூனிச் ஆகிய பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றினார். வெபருடைய முதன்மை ஆக்கங்கள், பகுத்தறிவாக்கம் (rationalization), மதச் சமூகவியல் (sociology of religion), அரசு ஆகிய துறைகள் சார்ந்தவை. இவருடைய மிக முக்கிய ஆக்கம், புரட்டஸ்தாந்த நெறிமுறைகளும் முதலாளித்துவ ஆற்றலும் (The Protestant Ethic and the Spirit of Capitalism) என்னும் கட்டுரையாகும்.

**இவரது நூல்கள்**

* *The Protestant Ethic and the Spirit of Capitalism*
* *From Max Weber: Essays in Sociology*
* *The Sociology of Religion*
* *Economy and Society: An Outline of Interpretive Sociology*
* *The City*
* *General Economic History*
* *Religion Of India*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## முப்பரிமாணம்

புதியபூமி (மார்ச் 2012)

"காதல் தோல்வி"

காதல் என்று வந்து விட்டால், காதல் தோல்வி என்பது ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல் சாதாரண விடயம். மாத்தளை ராமு வேணியிடம் தோல்வியுற்றுக், காதல் காச்சலில் தவிக்கிறான். ஒழுங்காகச் சாப்பிடுவதும் இல்லை, தூங்குவதும் இல்லை. கொஞ்சமாவது மனதைத் தேற்றிக் கொள்வதற்கு வீட்டின் பொது அறையில் உள்ள டேப் ரெக்கோடரில்

"... பெண்ணைப் படைக்காதே பிரம்மனே
பாவம் ஆண்களே பரிதாபம் நாங்களே
எந்த மடையனோ சொன்னான் சொர்க்கமாம்... "

என்ற பாடல் வரிகளைத் திரும்பத் திரும்ப ரிவைன்ட் செய்து செய்து கேட்டுக் கொண்டிருக்கிறான்.

சம்மாந்துறை சஹீலும் அவன் பங்கிற்குத் தோல்வியைக் கண்டுவிட்டுதான் இருக்கிறான். அவனைக் காதலித்த ரிஸ்னா நேற்றுடன் தன்னை மறந்து விடும்படிச் சொல்லிவிட்டாள். சஹீல் தனது அறையின் கதவைப் பூட்டிக் கொண்டு தனது சீடி பிளேயரின் அருகில் இருந்து கேட்கும் ஒரே பாடல்

"யம்மா யம்மா காதல் பொன்னம்மா
அட என்ன விட்டு போனதென்னம்மா....
அட ஆணோட காதல் கை ரேக போல...."

ஷாலிக்காவிடம் தோற்ற கல்கிஸ்ஸ ரொஷான் பைத்தியக்காரனைப் போல் இருக்கின்றான். ரொஷான் யாரிடமும் போசுவதில்லை. iPodஜக் காதில் போட்டவாறு, யானியின் இசையை அவன் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். தனிமையுடன் ஏற்படும் குளிரை மேலும் அதிகரித்துக்கொள்ள காரில் ஏசியை நடுங்கும் அளவிற்கு கூட்டி வைத்துக் கொண்டுள்ளான்.

-

கடிகாரம் உலகத்திற்கு வந்தது என்னவோ நேரம் பார்ப்பதற்கு என்றாலும் இன்று கைக்கடிகாரத்தை அணிபவர்கள் நேரம் பார்ப்பதற்கு மட்டுமல்லாமல் ஒரு ஃபெஷனையும் எதிர்பார்க்கின்றார்கள். கந்தப்பலையைச் சேர்ந்த சேகர் புதிய ஃபெஷன் கடிகாரம் ஒன்றை வாங்கக் கண்டிக்கு வந்தான். கடையில் இருக்கின்ற அனைத்து வகையிலான கடிகாரத்தையும் பார்த்துவிட்டு கடைசியில் 500 ரூபா பெறுமதியான கடிகாரம் ஒன்றை வாங்கினான்.

கெக்கிராவ சந்தன தான் கொழும்பிற்கு வந்தபோது வேலைக்குச் செல்லும்போது அணிவதற்காகப் புதிய டிசைன் கடிகாரம் ஒன்றைத் தேடினான். சுவிஸ் ரொலெக்சையும் சுவிஸ் ஒமேகாவையும் தடவிப் பார்த்துக் கொண்டிருந்த அவன் கடைசியாக 1800 ரூபா பெறுமதியான சீன டிஜிட்டல் கடிகாரம் ஒன்றை வாங்கினான்.

தெஹிவலை கோகுலன் கடிகாரம் ஒன்றை வாங்க MC க்குச் சென்றான். கோகுலன் தொடர்ந்து பாவித்தது சுவிஸ் பனேரியா கடிகாரம். இம்முறையும் கோகுலன் அதே பிராண்ட்டில் புதிய ஃபெஷன் கடிகாரத்தை வாங்கினான். அதன் விலை 50,000 ரூபா. அதனைப் பார்த்தவுடன் அவ்வளவு விலையானது எனக் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அந்த பிரான்ட் பற்றித் தெரிந்தவர்களுக்கு மட்டும் அதன் விலையைப் பற்றியும் தெரியும்.

-

இன்று எது அழகு என்று சொல்லித்தருவது யார் என்று உங்களுக்குத் தெரியும். பெண்களுக்கும் சரி ஆண்களுக்கும் சரி எவை எல்லாம் அழகிற்குக் கேடானவை என்பதை பட்டியலிட்டு நமது ஊடகங்கள் நாளும் பொழுதும் சொல்லித்தருகின்றன.

அதன் விளைவாகத் தற்கால இளம் பெண்களுக்குத் தொப்பை இருத்தல் அவ்வளவு விருப்பமான விடயமல்ல. உடற் கட்டமைப்பைப் பராமரிக்கத் தொப்பை இல்லாமல் இருத்தல் வேண்டும். எம்பிலிப்பிட்டிய நயனாவிற்கும் செவ்வந்திக்கும் தொப்பை வைத்தல் பெரும் பிரச்சினையாக ஆகிவிட்டது. தொப்பையைக் குறைக்க அவர்கள் முடிவு எடுத்தனர்.

எனவே ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் அவர்கள், வேலை விட்டுப் போகையில் சற்றுத் தூரமான பாதையினூடாக வீட்டுக்கு நடந்து செல்லத் தீர்மானித்தார்கள். நாள் முழுக்க ஆடைத் தொழிற்சாலையில் உழைத்துச் செத்து வரும் அவர்களுக்கு வழமையை விட ஒரு கிலோமிட்டர் தூரம் நடந்து செல்லுதல் கஷ்டமாகத் தோன்றவில்லை, தொப்பையைக் குறைப்பதற்காக அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டு தொடர்ந்து நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த ரீமா தொப்பையைக் குறைப்பதற்குக் கண்டியில் உள்ள ஜிம் ஒன்றில் 1500 ரூபா மாதக் கட்டணத்திற்கு உடற்பயிற்சி செய்வதற்குச் சேர்ந்தாள். என்றாலும் ரீமாவுக்குத் தொழில் காரணமாக ஜிம்முக்கு போக முடியாமலுள்ளது. தொழிலை முடித்து விட்டு ஜிம்முக்கு செல்வதற்கு ரீமா ஒவ்வாரு நாளும் பெரும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஏனைய எல்லாருக்கும் போலவே லக்கிகாவுக்கும் இந்த பிரச்சினை இருக்கிறது. என்றாலும் கஷ்டப்பட்டு தொப்பையைக் குறைப்பதற்கு அவளுக்கு இஷ்டம் இல்லை. எனவே அவள் கஷ்டமின்றி வயிற்றைக் குறைப்பது தொடர்பாக யோசித்தாள். அவளின் நன்பி மெக்டொனல்டில் வைத்து அன்றொரு நாள் "பெட் பேர்ன்ட்" என்ற புதிய சிகிச்சையைப் பற்றி கூறிய செய்தி ஞாபகத்திற்கு வந்தது. அச் செய்திக்கு அமைய அவள் மாதம் 50,000 ரூபா செலுத்தி பெட் பேர்ன்ட் நிலையத்துக்கு செல்கிறாள்.

-

ஒரே மாதிரி ஒரே வடிவில்...

நவீன், ரொஷான், வினோதன் மூவரும் இன்று Galleface வந்துள்ளனர்.

நவீன் மொன்டேரோ ஒன்றில் வந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் விந்தியா வருவதாகச் சொல்லியிருந்தாள். நவீன் அவள் வரும் வரை கடற்கரைப் பகுதிக்கு சென்றான்.

ரொஷான் மோட்டர் பைக் ஒன்றில் வந்தான். நிவேதா 'ஷோர்ட் லீவ்' எடுத்துக்கொண்டு ரொஷானைச் சந்திக்க வருவதாகக் கூறியபடியால் ரொஷான் காத்துக் கொண்டிருக்கின்றான்.

வினோதன் பேரூந்தில் வந்தான். வனிதா வரும் வரை வினோதன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மூவரும் கடற்கரையோரம் வெவ்வேறு இடங்களிலே ஒருவருக்கு ஒருவரைத் தெரியாது நின்று கொண்டிருந்தாலும், மூவரும் கோல்பேஸ் வந்த நோக்கம் ஒன்று. ஆனால் மூவரையும் தூரத்தில் இருந்து பார்க்கும் போது ஒரு ஒற்றுமை தென்பட்டது. அந்த ஒற்றுமை, அவர்கள் மூவரும் நீல நிற டெனிம் காற்சட்டையை அணிந்திருந்தார்கள்.

நவீனின் டெனிம் "லிவைஸ்". சென்ற வாரம் வாங்கியது. புதிதாக வந்த டிசைன். ஆதலால் நவீன் கண்டவுடன் வாங்கிவிட்டான். அதன் விலை 16,000 ரூபாய்.

ரொஷான் தன் டெனிமை நோ லிமிட்டில் வாங்கினான். தொடர்ந்து ஒரு டெனிமை 2 வருடங்கள் பாவித்து நிறம் மாறியபடியால், இம் முறைச் சம்பளத்திற்கு 2000 ரூபாய்க்கு அந்த டெனிமை வாங்கினான்.

வினோதன் டெனிம் வாங்கியது மதிவெல பாதை ஓரத்தில் திடீரெனப் போடப்பட்ட சேல் ஒன்றில். அந்த இடத்தில் குறைந்த விலைக்கு நிறைய டெனிம்கள் விற்கப்பட்டன. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கழிக்கப்பட்ட ஆடைகளே அவ்விடத்தில் போடப்பட்டிருந்தன. வினோதன் அவற்றில் தேடித் தேடி 500 ரூபாய்க்கு ஒரு டெனிமை வாங்கினான்.

மூன்று வகையான விலைகளைக் கொண்டிருந்த போதும் மூன்று டெனிம்களினதும் நிறமும் தோற்றமும் ஒன்றுதான்.

### சமகாலத்தில் நாம் உரையாடவேண்டியுள்ள விடயங்கள்

சமகாலத்தில் நாம் உரையாடவேண்டியுள்ள விடயங்கள், கற்கவேண்டியுள்ள சமூக அரசியல் பரப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலாக இன்றைய சமூக விஞ்ஞானக் கற்கைவட்டத்தின் கூட்டம் அமையும்

1. சமகாலத்தில் எம்மைச்சுற்றி நடக்கும் மிக முக்கியமான சம்பவங்களையும் அரசியல் சமூக பொருளாதாரப் போக்குகளையும் இனம் காணல்.

2. அப்போக்குக்களை ஆய்வு செய்ய உதவக்கூடிய மெய்யியல், அறிவியல் விடயங்களை இனம்காணல்.

3. அவற்றை விடயப்பரப்புக்களாகப்பிரித்தல்.

4. குறித்த விடயப்பரப்புக்களை கற்றுப் பகிரப்போகும் குழுக்களை, உறுப்பினர்களை நியமித்தல்.

5. ஒவ்வொரு விடயப்பரப்புகக்ளையும் கற்பதற்கான காலம், பகிர்வதற்கான திகதி போன்றவற்றை பருமட்டாகத் திட்டமிடல்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA